

காஞ்சிபுரம் பச்சையப்பன் ஆடவர் கல்லூரியில், நடைபெற்ற மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமினை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் துவக்கி வைத்து, வேலைவாய்ப்பு முகாமில் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் கலைச்செல்வி மோகன், காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி. எழிலரசன், காஞ்சிபுரம் மாநகராட்சி மேயர் எம்.மகாலட்சுமி யுவராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் செ.வெங்கடேஷ், திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) மு.பிச்சாண்டி, மாவட்ட வேலைவாய்ப்பு துறை துணை இயக்குநர் ஆர்.அருணகிரி ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை ஊராட்சி ஒன்றியம், களமாவூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, பொதுசுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை சார்பில், ரூ.1.80 கோடி செலவில் 6 புதிய மருத்துவக் கட்டிடங்களை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, தலைமையில் நேற்று (21.09.2024) திறந்து வைத்தார்கள். உடன் கரூர் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வி.எஸ்.ஜோதிமணி, சட்டமன்ற உறுப்பினர்கள் மரு.வை.முத்துராஜா (புதுக்கோட்டை), எம்.சின்னத்துரை (கந்தர்வக்கோட்டை), முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் , மாவட்ட வருவாய் அலுவலர் அ.கோ.ராஜராஜன், இணை இயக்குநர் (மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்) மரு.சா.ஸ்ரீபிரியா தேன்மொழி, இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் அ.அக்பர்அலி, புதுக்கோட்டை மாவட்ட சுகாதார அலுவலர் மரு.ராம்கணேஷ், விராலிமலை ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி.காமு.மு.பி.மணி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

### தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து

# 29 வீரர் - வீராங்கனைகளுக்கு ரூ.54.20 இலட்சத்திற்கான காசோலைகள்!

### இளைஞர் நலன் – விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, செப்.22-

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து 29 வீரர், வீராங்கனைகளுக்கு ரூ.54.20 இலட்சத்திற்கான காசோலைகளை வழங்கினார்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (20.09.2024) தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து, தென்கொரியாவில் நடைபெற உள்ள 2024 உலக டேக்வாண்டோ ஜுனியர் சாம்பியன்ஷிப் போட்டியில் பங்கேற்க உள்ள வீராங்கனை ஆர்.ஜனனி அவர்களுக்கு செலவீனத் தொகையாக ரூ.3 இலட்சத்திற்கான காசோலை வழங்கினார்.

மேலும் கம்போடியாவில் 06.10.2024 முதல் 13.10.2024 வரை நடைபெற உள்ள ஆசிய கிக் பாக்ஸிங் சாம்பியன்ஷிப் போட்டியில் பங்கேற்க உள்ள 5 வீரர், வீராங்கனைகளுக்கு தலா ரூ.2.50 இலட்சம் மற்றும் உஸ்பெக்கிஸ்தானில் 24.09.2024 முதல் 29.09.2024 வரை நடைபெற உள்ள கிக் பாக்ஸிங் உலக கோப்பைப் போட்டியில் பங்கேற்க உள்ள 11 வீரர், வீராங்கனைகளுக்கு செலவீனத் தொகையாக தலா ரூ.2 இலட்சத்திற்கான காசோலையினை வழங்கினார்.

ஸ்பெயினில் நடைபெற உள்ள உலக ஸ்ட்ராங்மேன் சாம்பியன்ஷிப் போட்டியில் பங்கேற்க உள்ள டி. கண்ணன் அவர்களுக்கு செலவீனத் தொகையாக ரூ.2 இலட்சத்திற்கான காசோலையினையும், உஸ்பெக்கிஸ்தானில் நடைபெற உள்ள 8வது ஆசிய பென்காக் சிலாட் 2024 சாம்பியன்ஷிப் போட்டியில் பங்கேற்க உள்ள 7 வீரர்களுக்கு தலா ரூ.1.50 இலட்சம் மற்றும் சீனாவில் 28.9.2024 மற்றும் 29.9.2024 ஆகிய தேதிகளில் நடைபெற உள்ள WDSF (World Dance Sport Federation) உலக பிரேக்கிங் நடன விளையாட்டு யூத் சாம்பியன்ஷிப் போட்டியில் பங்கேற்க உள்ள பிரேம் காந்தி மற்றும் ஆராதனா ஆகியோருக்கு செலவீனத் தொகையாக தலா ரூ.1.50 இலட்சத்திற்கான காசோலை மற்றும் அ.கருணாசாகர், ஆர்.பிரணவ் சாய் இருவக்கும் ஸ்கேட்டிங் உபகரணங்கள் வாங்குவதற்காக தலா ரூ.60 ஆயிரத்திற்கான காசோலையினை அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் மேகநாத ரெட்டி மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன் – செஞ்சி மஸ்தான் சிறப்புரை! சைதை சாதிக் தலைமை!

# சென்னை தெற்கு மாவட்ட சிறுபான்மை நல உரிமைப் பிரிவு சார்பில் மிலாது நபி விழா!

### தமிழச்சி தங்கபாண்டியன் – மு.மகேஷ்குமார் – ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா – டாக்டர் சுபேர்கான் பங்கேற்பு!

சென்னை, செப். 22 -

சென்னை தெற்கு மாவட்ட சிறுபான்மை நல உரிமைப்பிரிவு சார்பில் மிலாது நபி விழா சைதாப்பேட்டை பஜார்சாலையில் உள்ள வர்த்தக சங்க திருமண மண்டபத்தில் மாவட்ட அமைப்பாளர் சைதை சாதிக் தலைமையிலும், சைதை மேற்கு பகுதி கழகசெயலாளரும், பத்தாவது மண்டலகுழு தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி, சைதை கிழக்கு பகுதி கழக செயலாளரும், பதிமூன்றாவது மண்டலகுழு தலைவருமான இரா.துரைராஜ், பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் எம்.சி. ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

மாவட்ட துணை அமைப்பாளர்கள் கரீம் முல்லா, வேளச்சேரிஷேக், ஜெய்பிரகாஷ், எம்.எஸ். எம்.ஷேக் ஆகியோர் வரவேற்றனர்.

இவ்விழாவிற்கு சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள்நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், சிறுபான்மையினர் நலன்மற்றும் வெளிநாடுவாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான், மாநில சிறுபான்மைநல உரிமைபிரிவு செயலாளர் டாக்டர் சுபேர்கான், தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி.முனைவர் தமிழச்சிதங்கபாண்டியன், விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம். வி.பிரபாகர்ராஜா, பெருநகர சென்னை மாநகராட்சி துணைமேயர் மு.மகேஷ்குமார் ஆகியோர் இந்நிகழ்வில் பங்கேற்று சைதாப்பேட்டையில் உள்ள 26 பள்ளிவாசல்களை சார்ந்த இமான்கள், மோதினார்களுக்கு புத்தாடைகளை வழங்கி பல்வேறு சமத்துவ கருத்துக்களை எடுத்துரைத்து சிறப்புரை யாற்றினார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட அவைத்தலைவர் எஸ்.குணசேகரன், மாவட்ட துணை செயலாளர் பாலவாக்கம் த.விஸ்வநாதன் எம்.சி., கழக தேர்தல் பணிக்குழு செயலாளர் வேளச்சேரி பி.மணிமாறன் எம்.சி., ஒன்றியகழகசெயலாளர் கோவிலம்பாக்கம் ஜி.வெங்கடேசன், பொதுக்குழு உறுப்பினர்கள் மின்னல் கந்தப்பன், அ . அ ரி கி ரு ஷ் ண ன் , தா.மோகன்கு மார் எம்.சி., பகுதி கழக நிர்வாகிகள் களக்காடிஎல்லப்பன், த.சம்பத், ஆர்.ரமேஷ், கவிதா கௌதமன், மாவட்ட பிரதிநிதிகள் கிண்டி ஆர்.எல். செல்வம், பொன்.ஜெய்சிங், ஏ.மஜீத், ஏ.சலாம், செல்வராஜ் உள்ளிட்ட சிறுபான்மை நல உரிமை பிரிவை சார்ந்த பகுதி அமைப்பாளர்கள், பகுதி துணை அமைப்பாளர்கள், இஸ்லாமிய சகோதர தோழர்கள் ஆகியோர் இந்நிகழ்வில் பங்கேற்று சிறப்பித்தனர்.

### ஆவடி சி.ஆர்.பி.எப். நகரில்

# 74.51 லட்சம் மதிப்பீட்டில் சாலை அமைக்கும் பணி!

### ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்!

திருவள்ளூர், செப். 22

ஆவடி தொகுதிக்கு உட்பட்ட சி.ஆர்.பி.எப். நகர் 11 தெருக்களுக்கு சாலை அமைக்கும் பணியை ரூபாய் 74 லட்சம் மதிப்பீட்டில் முன்னாள் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்.

திருவள்ளூர் மாவட்டம், ஆவடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட ஆவடி மாநகராட்சி சி.ஆர்.பி.எஃப். நகர் பகுதியில் வாழும் பொதுமக்கள் நீண்ட நாட்களாக சாலை அமைத்து தர வேண்டும் என்று ஆவடி சட்டமன்ற உறுப்பினர் சாமு நாசரிடம் கோரிக்கை வைத்தனர்.

ஆவடி மாநகராட்சிக்கு உட்பட்ட ஆவடி, சி.ஆர். பி.எஃப் நகர், 4 வது வார்டில், தமிழ்நாடு சாலை உள்கட்டமைப்பு 202425 திட்டத்தின் கீழ் அப்துல் காலம் தெரு, ஸ்ரீ வாரி தெரு உள்ளிட்ட 11 தெருக்களுக்கு சுமார் ரூபாய் 74.51 லட்சம் மதிப்பில் சாலை அமைக்கும் பணிகளை முன்னாள் அமைச்சரும் மாவட்ட கழகச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ, பணிகளை தொடங்கி வைத்து அங்கிருந்த பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கினார்.

இதனை தொடர்ந்து ஆவடி காமராஜர் நகர அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி யில் 11-ஆம் வகுப்பு படிக்கும் மாணவிகளுக்கு தமிழ்நாடு பள்ளி கல்வித் துறை சார்பாக 550 விலையில்லா மிதிவண்டிகளை முன்னாள் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ. வழங்கி சிறப்புரையாற்றினார்.

இதில் ஆவடி மேயர் ஜி.உதயகுமார், ஆவடி மாநகராட்சி பணிகள் குழு தலைவர் சா.மு.நா.ஆசிம்ராஜா, மாநகர பொறுப்பாளர் சன். பிரகாஷ், பகுதிச் செயலாளர்கள் பொன்.விஜயன், ஜி. நாராயண பிரசாத், பொன்னேரி கல்வி மாவட்ட அலுவலர் கஸ்தூரி, மண்டல தலைவர் ஜோதிலட்சுமி, மாநகராட்சி பொறியாளர் பி.வி.ரவிச்சந்திரன் பள்ளி தலைமை ஆசிரியர் பிரேமா உள்பட மாநகராட்சி அதிகாரிகள் ஆசிரியர்கள் கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் வார்டு செயலாளர்கள் பலர் கலந்துகொண்டனர்.

### சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் குடிநீர் குழாய் இணைக்கும் பணி செய்வதால்

# மண்டலம் 9, 13 பகுதிகளில் குடிநீர் விநியோகம் நிறுத்தம்!

### சென்னை குடிநீர் வாரியம் தகவல்!

சென்னை, செப்.22-

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் (CMRL) மந்தைவெளி ராமகிருஷ்ணா மடம் சாலையில் குடிநீர் பிரதான குழாய் இணைக்கும் பணிகளை மேற்கொள்வதால் 24.09.2024 அன்று காலை 09.00 மணி முதல் 26.09.2024 அன்று காலை 4.00 மணி வரை (43 மணி நேரம்) MRC நகர் குடிநீர் பகிர்மான நிலையத்தின் செயல்பாடுகள் தற்காலிகமாக நிறுத்தம் செய்யப்படும். ஆகையால் மண்டலம் 9 (தேனாம்பேட்டை) மற்றும் மண்டலம் 13 (அடையாறு) - க்குட்பட்ட கீழ்கண்ட பகுதிகளுக்கு குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் நிறுத்தம் செய்யப்படுகிறது.

மண்டலம்9 (தேனாம்பேட்டை) - திருவல்லிகேணி, இராயப்பேட்டை, மயிலாப்பூர், நந்தனம், அபிராமபுரம் (பகுதி), மந்தைவெளி மண்டலம்13 (அடையாறு) - ராஜா அண்ணாமலைபுரம்

எனவே, பொதுமக்கள் முன்னெச்சரிக்கையாக, வேண்டிய அளவு குடிநீரை சேமித்து வைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். அவசரத் தேவைகளுக்கு லாரிகள் மூலம் (Dial for Water) குடிநீர் பெற்றுக்கொள்ள வாரியத்தின் https://cmwssb.tn.gov.in என்ற இணையதள முகவரியினை பயன்படுத்தி பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம். மேலும், குடிநீர் இணைப்பு இல்லாத பகுதிகள் மற்றும் அழுத்தம் குறைவான பகுதிகளுக்கு குடிநீர் தொட்டிகள் மற்றும் தெரு நடைகளுக்கு லாரிகள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் எந்தவித தடையுமின்றி வழக்கம் போல் சீரான முறையில் மேற்கொள்ளப்படும். மேலும், கூடுதல் தகவல்களுக்கு 0444567 4567 என்ற எண்ணை தொடர்பு கொள்ளலாம்.

இவ்வாறு சென்னை குடிநீர் வாரியம் தெரிவித்துள்ளது.

# திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றிய தி.மு.க. அவசரச் செயற்குழுக் கூட்டம்!

### ஒன்றியச் செயலாளர் எஸ்.டி.கருணாநிதி அறிக்கை!

காஞ்சிபுரம், செப். 22

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றிய தி.மு.க. அவசரச் செயற்குழுக் கூட்டம் (23.09.2024 திங்கட்கிழமை) காலை 10 மணிக்கு, சுங்கு வார் சத்திரம், ஒன்றிய தி.மு.க. அலுவலகத்தில் ஒன்றியச் செயலாளர் எஸ்.டி.கருணாநிதி தலைமையில் நடைபெறுகிறது.

கூட்டத்தில் ஜெ.சிவபாதம் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

பி.கலைமோகன், தி.பிரபாகரன், நளினா சின்ன கண்ணு, மா.மணிவண்ணன், ச.வேலுமணி, ஏ.நாசர், இ.முனி கிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள் பி.ரவி, இரா. பிரகாசம், நா.சத்யா, ஏ.முரளிதரன், இரா.வெங்கடேசன், எஸ்.டி.கே.சபரி ராஜா, ஜி.எஸ். குமார், ஆகியோர் கலந்து கொள்ள உள்ளனர்.

எனவே ஒன்றியத்திற்கு உட்பட்ட அனைத்து நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், பொதுமக்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் நடைபெற உள்ள கழக பவள விழா பொதுக்கூட்டத்தில் நமது கழகத் தலைவர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார். இந்நிலையில் கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொள்வது குறித்தும், சிறப்பான வரவேற்பு வழங்குவது குறித்தும் இக்கூட்டத்தில் கலந்தாலோசனை நடைபெறுகிறது.

ஒன்றிய வடக்கு இளைஞர் அணி அமைப்பாளர் பாலா (எ) பால்ராஜ் நன்றி கூறுகிறார்.

இவ்வாறு திருப்பெரும்புத்தூர் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் எஸ்.டி.கருணாநிதி தெரிவித்துள்ளார்.

## சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே! “வயநாடு நிலச்சரிவு பேரிடருக்கு, இதுவரை ஒன்றிய பா.ஜ.க. அரசு, எந்தவித நிதி உதவியும் செய்யவில்லை” என்று கேரள மாநில முதல்வர் பினராயி விஜயன் தனது மனக் குமுறலை வெளிப்படுத்தி இருக்கிறாரே ?

**பெரியதம்பி :** **ஆமாம்பா! வயநாடு பேரிடருக்கு நிதி உதவி செய்வதால் பா.ஜ.க.வுக்கு அரசியல் ரீதியாக என்ன லாபம் ஏற்பட்டுவிடப் போகிறது ?**

**எந்தக் காலத்திலும் காவி அங்கே கரைசேரப் போவதில்லை; தாமரை அங்கே மலரப் போவதில்லை !**

**வயநாடு என்றாலே, பா.ஜ.க.வைப் பொருத்தவரை “ பய நாடு ” தானே !**



திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஆவடி மாநகராட்சி சி.ஆர்.பி.எப் நகர 4 வது வார்டில் அப்துல் காலம் தெரு , ஸ்ரீ வாரி தெரு உள்ளிட்ட 11 தெருக்களுக்கு 74.51 லட்சம் மதிப்பில் சாலை அமைக்கும் பணிகளை முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்டச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ துவக்கி வைத்தார் அருகில் ஆவடி மேயர் ஜி.உதயகுமார், ஆவடி மாநகராட்சி பணிகள் குழு தலைவர் சா.மு.நா.ஆசிம்ராஜா, மாநகர பொறுப்பாளர் சன்.பிரகாஷ், பகுதிச் செயலாளர்கள் பொன்.விஜயன், நாராயண பிரசாத் மாநகராட்சி பொறியாளர் பி.வி.ரவிச்சந்திரன் உள்பட பலர் உள்ளனர்.



திருவள்ளூர் மேற்கு மாவட்டம் இரா.கி பேட்டை கிழக்கு ஒன்றிய கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் ஒன்றிய செயலாளர் பெ.பழனி ஏற்பாட்டில் இரா கி பேட்டையில் நடைபெற்றது. இதில் மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார் உடன் மாவட்ட நிர்வாகிகள் கே.எம்.சுப்பிரமணி, ம.கிரண், ஜி.சித்திக் அலி, வீரமங்கலம் மா.ரகு ஒன்றிய நிர்வாகிகள் சங்கரன்,சத்யராஜ், திருவேங்கடம், சி.எம்.ரவி, பா.சம்பத், நவீன் குமார், சுகுணாமூர்த்தி, பெருமாள், டில்லி பாபு,பிரமிளா வெங்கடேஷ், நாகப்பன், சின்ன பாப்பா, சி சுப்பிரமணி, ஏழுமலை, மாத்தையா,ப.வினோத்,அம்மு சேகர், செல்விசந்தோஷ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.